# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய பொருளாதாரம்

பகுதி : **விலை மற்றும் விலைக்கொள்கை**

**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# விலை மற்றும் விலைக்கொள்கை

## வேளாண் விலைக் கொள்கை (Agricultural Price Policy)

- வேளாண்மை பொருட்களில் விலையை நிர்ணயித்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய கொள்கைக்கு வேளாண் விலைக் கொள்கை என்று பெயர்.

## அரசின் விலைக் கொள்கைகள் (Price Polices of the Govt)

### I. குறைந்த ஆதரவு விலை (MSP) (Minimum Support Price)

- விதைக்கும் பருவகாலத்தின் தொடக்கத்தில் ஒவ்வொரு முக்கிய வேளாண் பண்டங்களுக்கும் அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவிக்கும். அறுவடைக்குப்பின் வேளாண் பொருட்களின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு குறையுமானால் அங்காடி உபரி அனைத்தையும் அரசே கொள்முதல் விலையில் வாங்கிக் கொள்ளும்.

### 2. கொள்முதல் விலை (Procurement Price)

- இது அறுவடை காலத்தில் அரசு அறிவிக்கும் விலையாகும். வேளாண் பொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட இது அதிகமாக இருக்கும். உழவர்களிடமிருந்து கொள்முதல் செய்த பண்டங்களின் அங்காடி விலை கொள்முதல் விலையைவிட குறையுமானால் அங்காடிகள் அந்த பொருட்களை அரசுக்கு விற்றுவிடலாம்.
- பொதுப்பங்கீட்டு முறைக்கும், "தாங்கியிருப்புக்கும்" (Buffer stock) தேவையான பண்டங்களை கொள் முதல் செய்ய அரசுக்கு இது உதவுகிறது. வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் குழுவின் (Commission for Agricultural cost and prices – CACP) பரிந்துரையின்படி அரசால் இவ்விலை அறிவிக்கப்படுகிறது. பொதுவாக குறைந்த ஆதரவு விலையைவிட கொள்முதல் விலை அதிகமாக இருக்கும்.

### 3. வழங்கல் விலை (Issue Price)

- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உணவு தானியங்கள் மற்றும் அளிப்பு மற்றும் ஒதுக்கீட்டிற்காக இந்திய உணவுக் கழகத்தால் அறிவிக்கப்படும் விலை வழங்கல் விலையாகும். இதைச் சார்ந்தே நியாயவிலைக் கடைகளின் விலையும் இருக்கும். வழங்கல் விலை அங்காடி விலையைவிட குறைவாகவும் கொள்முதல் விலையைவிட அதிகமாகவும் இருக்கும்.

### 4. சில்லறை விலை (Retail Price)

- அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அடிப்படை நுகர்வு பண்டங்களை நியாயவிலை கடைகள் மக்களுக்கு வழங்கும். இவ்விலைக்கு சில்லறை விலை என்று பெயர். பொதுவாக சில்லறை

விலை வழங்கல் விலையைவிட சற்று அதிகமாகவே இருக்கும். அப்போதுதான் பொது பங்கீட்டுத்துறையும் உரிமம் பெற்றவர்களும் சிறிதளவு லாபத்தையும் அடைய முடியும்.

**5. தாங்கியிருப்பு நடவடிக்கைகள் (Buffer stock Operations)**

- இந்நடவடிக்கைகள் இந்திய உணவுக் கழகத்தால் (Food Corporation of India – FCI) மேற்கொள்ளப்படுகிறது. எப்போதெல்லாம் உணவு தானிய இருப்பின் விலை குறைகிறதோ, அப்போது FCI கொள்முதல் விலையில் அவற்றை வாங்குகிறது. மேலும் எப்பொழுதெல்லாம் உயர்கிறதோ அப்பொழுது இந்திய உணவு கழகம் (FCI) அவற்றை விற்பனை செய்ய முனைகிறது. இவ்வாறு தாங்கியிருப்பு நடவடிக்கைகள் வேளாண் பொருட்களின் விலையை நிலைப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

$$\text{வேளாண்மை உற்பத்தி} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{வேலைக்கு அமர்த்தப்பட்ட உள்ளீடுகளின் அளவு}}$$

$$\text{நிலத்தின் உற்பத்தி திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{நிலத்தின் பரப்பளவு}}$$

$$\text{உழைப்பின் உற்பத்தி திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை}}$$

$$\text{மூலதன உற்பத்தி திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{மொத்த முதலீட்டு அளவு}}$$

**ஆதாரம் : பொருளாதார ஆய்வு 2005 - 2006**

குறிப்பிட்ட பண்டங்களின் விளைச்சல் சர்வதேச நாடுகளுடன் ஒரு ஒப்பீடு
(1 ஹெக்டர்க்கு - கி.கிராமில்)

| பண்டங்கள் | நாடுகள் | ஹெக்டேருக்கு கி.கி |
|---|---|---|
| அரிசி | தாய்லாந்து<br>இந்தியா<br>எகிப்து<br>அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 2597<br>2915<br>9135<br>7372 |
| கோதுமை | வங்காளம்<br>சீனா<br>ஐக்கிய அரசு<br>இந்தியா | 2164<br>3885<br>8043<br>2770 |
| நிலக்கடலை | சீனா<br>அர்ஜென்டினா<br>பிரேசில்<br>இந்தியா | 2986<br>2329<br>2043<br>794 |

### பொதுப் பங்கீட்டுத் துறை (PDS)
### (Public Distribution System)

- அவசியமான உணவு பண்டங்களை சீரான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் குறிப்பிட்ட விலையில் அரசின் முகவர்களின் மூலம் மக்களுக்கு பகிர்வு செய்வது பொதுப் பங்கீட்டு முறை எனப்படும்.

### நியாய விலைக் கடைகள் (FPS)
### (Fair Price Shops (or) Ration Shops)

- நாடு முழுவதும் உள்ள 4.5 லட்சம் நியாய விலைக் கடைகள் மூலம் அடிப்படை பண்டங்களின் அளிப்பை பொதுப் பங்கீட்டு முறை உறுதிபடுத்துகிறது. ஒவ்வொரு கடையும் 2000 மக்களுக்கு பணிபுரிகின்றன.

### நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
### (Consumer Co-operative Stores)

- தரமான பொருட்களை நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்கும்படி செய்வதில் மூன்று நிலையிலான நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. அவையாவன அடிப்படை, மைய மற்றும் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களாகும். ஊரக பகுதிகளில் நுகர்வு பண்டங்களை பங்கீடு செய்ய 50,000 மேற்பட்ட கிராமப்புற அளவிலான சங்கங்கள் உள்ளன.